பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

21 04 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance,** பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் தற்போது புதுதில்லியில் பேச்சு நடத்தி வருகிறார்.

2. பாதுகாப்புப்படை வீரர்களின் உடல் நலன் மட்டுமின்றி மனநலனும் சீராக பராமரிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியத்தில் கடந்த பிப்ரவரி மாதம் புதிதாக 16 லட்சத்து 10 ஆயிரம் பேர் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. காதி கிராம தொழில் ஆணையத்தின் வர்த்தகம் முதல்முறையாக ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

5. தேசிய **Federation** கோப்பை தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் அபிநயா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

**<<<<<<>>>>>**

அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance,** பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் தற்போது புதுதில்லியில் பேச்சு நடத்தி வருகிறார்.

பிரதமரின் இல்லத்தில் இந்த பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெறும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

**<<<<<<>>>>>**

பாதுகாப்புப்படை வீரர்களின் உடல் நலன் மட்டுமின்றி, மனநலனும் சீராக பராமரிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ராஜஸ்தானின் மவுண்ட்அபு-வில் உள்ள பிரம்மகுமாரிகள் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார். நவீன போர் முறைகளை எதிர்கொள்வதற்கு படை வீரர்களின் மனநலன் சீராக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இதற்கு பிரம்மகுமாரிகள் அமைப்பு உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

உறுதியான, துடிப்புமிக்க பாதுகாப்புப்படை வீரர்கள் நாட்டின் ஒளிவிளக்காக திகழ்வார்கள் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

நக்சலைட்டுகளை முற்றிலும் ஒடுக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஜார்கண்ட்டில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் எட்டு நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நக்சலைட்டுகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட வேண்டும் என்பதை இலக்காக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்புப்படையினர் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உணவில் எண்ணெய் பயன்பாட்டை குறைப்பது கல்லீரல் பாதிப்பை தடுக்க உதவிடும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கல்லீரல் ஆரோக்கியம் தொடர்பான உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியிலும், எண்ணெய் பயன்பாட்டை குறைப்பது குறித்து பேசியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆரோக்கியமான வாழ்வியல் முறையை பின்பற்றுவதன்மூலமும், கல்லீரல் பாதிப்பை தடுக்க இயலும் என்று அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் திரு நட்டா கூறினார்.

<<<<<<>>>>>

இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட், ஆஸ்திரேலியா உட்பட 11 நாடுகளின் விமானப்படை கூட்டுப்பயிற்சி இன்று ஐக்கிய அரபு எமிரேட்டில் தொடங்கியது.

இந்த பன்னாட்டு கூட்டுப்பயிற்சியில் இந்திய விமானப்படையின் மிக்-29, ஜாக்வார் ரக போர் விமானங்கள் பங்கேற்றுள்ளன.

பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கிலான இந்தப் பயிற்சி அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

முக்கிய எட்டு தொழில்துறை கடந்த மாதம் 3 புள்ளி எட்டு சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சிமெண்ட், உரம், எஃகு, மின்சாரம், நிலக்கரி, உள்ளிட்ட எட்டுத்துறைகள் இந்த வளர்ச்சியை கண்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியத்தில் கடந்த பிப்ரவரி மாதம் புதிதாக 16 லட்சத்து 10 ஆயிரம் பேர் இணைந்துள்ளனர்.

இது கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் நான்கு சதவீதம் அதிகமாகும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

காதி கிராம தொழில் ஆணையத்தின் வர்த்தகம் முதல்முறையாக ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி வரலாற்று சாதனை படைத்துள்ளதாக அதன் தலைவர் திரு மனோஜ் குமார் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கடந்த நிதியாண்டிற்கான வர்த்தக விவரங்களை வெளியிட்டு அவர் பேசினார்.

கடந்த 11 ஆண்டுகளில் விற்பனை 447 சதவீதமும், உற்பத்தி 347 சதவீதமும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

காதி கிராம தொழில் ஆணையம் கிராமப்புறங்களுக்கு அதிக அளவு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதாகவும் திரு மனோஜ் குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

குஜராத் முதலமைச்சர் திரு புபேந்திர பட்டேல், பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது குஜராத் மாநில வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் வக்ஃப் திருத்தச்சட்டம் தொடர்பாக நடைபெற்ற வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய இணையமைச்சர் திரு சுகந்த மஜும்தார் இன்று பார்வையிட்டார்.

**Murshidabad** மாவட்டத்துக்கு உட்பட்ட **Samshergunj** கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து அமைச்சர் ஆறுதல் தெரிவித்தார்.

இந்த வன்முறை சம்பவங்கள் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

சத்தீஸ்கரில் நக்சலைட்டுகளின் கண்ணி வெடியில் சிக்கி பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

பிஜப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட **Mormed** வனப்பகுதியில் பாதுகாப்புப்படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இந்த சம்பவம் நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

தில்லியில் கோடை வெயிலின் தாக்கத்தை எதிர்கொள்வதற்கான செயல் திட்டத்தை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா இன்று வெளியிட்டார்.

பொது இடங்களில் குளிர்ந்த தண்ணீர் வழங்கும் 300 தானியங்கி கருவிகளை நிறுவுவது, ஆயிரத்து 800 பேரிடர் தன்னார்வலர்களை கொண்டு நிழற்கூடங்கள் அமைப்பது போன்றவை இந்த செயல் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

மூவாயிரம் முதல், நான்காயிரம் வரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான மையங்களை ஏற்படுத்துவதற்கும் இந்த செயல் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் லாட்டரி வருவாயை அதிகரிப்பது குறித்து ஆய்வு செய்வதற்கென பத்து பேர் கொண்ட குழுவை அம்மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தக்குழு கேரளாவில் பயணம் மேற்கொண்டு லாட்டரி சீட்டு வருவாயை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக்குழுவில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருமாத காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு இந்த குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர், 3 பேர் காயமடைந்தனர்.

போபால் - **Jabalpur** சாலையில் சென்றுகொண்டிருந்த ஜீப் பத்தடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஓட்டுநரின் கவனக்குறைவே இந்த விபத்திற்கு காரணம் என்று காவல்துறையின் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

<<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான விழிப்புணர்வு பிரச்சார இயக்கங்கள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

இந்த இயக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது என கிராம பஞ்சாயத்துகள் முடிவு செய்துள்ளன.

பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<<<<<<>>>>>

ரஷ்யாவில் தேசிய அதிநவீன கணினி மையத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறு அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் புட்டின் அறிவுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்த மையத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

தேசிய ஃபெடரேஷன் கோப்பை தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் அபிநயா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

கொச்சியில் இன்று தொடங்கிய இப்போட்டியின், மகளிர் 100 மீட்டர் ஓட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tikam Singh, Udham Singh, Rahul Gariya** ஆகியோர் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்றனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 52 கிலோ எடைப்பிரிவில் **Tikam Singh -** ஐக்கிய அரபு எமிரேட்டின் **Ali Almesmari** –ஐ வென்றார்.

54 கிலோ எடைப்பிரவில் **Udham Singh -** ஈரானின் **Mohammed Parsa** –வையும், 57 கிலோ எடைப்பிரிவில் **Rahul Gariya -** சீன தைபே-யின் **Li Shou** -வையும் வென்றனர்.

------------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி டெஸ்ட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி பெர்த் சென்றடைந்தது.

<<<<<<END>>>>>